DEPOSITION OF WITNESS

Judicial Form No. 53

(See Rule 42)

(Chapter XXIII Code of Criminal Procedure)

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE, No.I, UDUMALPET

Calender	:	CC No. 271/2022
Miscellaneous	:	
Preliminary Register	:	
Sessions	:	
Deposition of Witness for Prosecution	:	P.W.3

பெயர்	:	குமாரசாமி	தொழில்	:
தகப்பனார் பெயர் / கணவர் பெயர்	:		ஜாதி	:
கிராமம்	:		இனம்	:
தாலூக்கா	:		வயது	:
Mail ID	:		Mobile No.	:

Solemnly affirmed in accordance with the provisions of the Oaths Act, 1969, (Central Act 44 of 1969) on 27.01.2026.

எதிரி ஆஜர்

311 குவிமுச மனுவின் பேரில் எதிரி தரப்பில் குறுக்கு விசாரணை

1. _சம்பவம் ரோடு தென் மடல் ரோடு என்றால் ஆமாம். சம்பவ இடத்திலிருந்து உங்கள் வீடு எவ்வளவு தூரம் தள்ளி உள்ளது என்றால் 200 மீட்டர் தள்ளி உள்ளது. உங்களது வீட்டிற்கு முன்பு புறம் கடைகள் உள்ளதா அல்லது வீடுகள் உள்ளது என்றால் கடைகள் உள்ளது. இறந்தவர் உங்களது நண்பர் என்றால் ஆமாம். உங்களுக்கு அடிபட்ட விபரம் யார் கூறியது என்றால் நான் இருந்தேன். உங்களது நண்பர் ரோட்டின் மேற்புறம் இருந்து கீழ்ப்புறமாக ரோட்டை குறுக்காக கடந்து சென்றார் என்றால் ஆமாம். போக்குவரத்து மிகுந்த ரோடு என்றால் ஆமாம். ரோட்டை கடக்க வேண்டும் என்றால் இருபுறமும் பார்த்து தான் கடக்க வேண்டும் என்றால் சரிதான்.
2. வடக்கிலிருந்து தெற்கு நோக்கி வரும் பாகங்களுக்கு ரோட்டின் கீழபுறம் சரியான பாதை என்றால் ஆமாம். உங்களது நண்பர் ரோட்டை இருபுறமும்பார்த்து கடந்து இருந்தால் விபத்து நடந்திருக்காது என்றால் பார்த்து தான் சென்றார் அவர் மண்

ரோட்டிற்கு சென்ற பின்னர் தான் விபத்து நடந்தது. இந்த விபத்து மண் ரோட்டில் நடைபெற்றதா என்றால் ஆமாம். தார் ரோட்டில் இருந்து எவ்வளவு தூரம் தள்ளி நடந்தது என்றால் சுமார் 3 அடி. உங்கள் நண்பர் வாகனத்தின் மீது மோதிய வாகனத்தை ஓட்டி வந்தவருக்கும கால் கிழிந்து அடிப்பட்டிருந்தது தெரியுமா என்றால் அது பற்றி தெரியாது.

3. உங்களது நண்பர் சண்முகசுந்தரத்தை எத்தனை மணிக்கு மருத்துவமனைக்கு அழைத்து சென்றார்கள் என்றால் 8.00–8.30 மணி இருக்கும். யார் அழைத்து சென்றார்கள் என்றால், மகன் பாலாஜி , நானும் உடன் சென்றேன் இன்னும். ஊரிலிருந்து சிலரும் வந்தார்கள்.

4. பஸ் ஸ்டேண்ட் ரோட்டின் மேல் புறம் உள்ளதா அல்லது கிழபுறா உள்ளதா என்றால் மேற்புறமும் உள்ளது . சம்பவம் தார் ரோட்டில் நடந்ததாக போலிசார் குறிப்பிட்டு இருந்தால் அது தவறு என்றால் ஆமாம். விபத்தானது உங்கள் நண்பரின் அஜாக்கிரதையும் கவனக்குறையும் காரணம் என்றால் சரியல்ல. திடீரென ரோட்டை கடந்ததால் தான் விபத்து ஏற்பட்டது என்றால் சரியல்ல. உங்கள் நண்பர் அன்றைய தினம் மது அருந்தியிருந்தார் என்றால் இல்லை. நண்பர் என்பதால் பார்க்காதசம்பவத்தைபார்த்ததாக பொய்யாக சாட்சியம் அளிக்கிறிர்கள் என்றால் சரியல்ல._

மறுவிசாரணை இல்லை

இன்று திறந்த நீதிமன்றத்தில் என் முன்பாக சாட்சி விசாரிக்கப்பட்டு தட்டச்சரால் தட்டச்சு செய்யப்பட்டு சாட்சியால் படித்து பார்க்கப்பட்டு சரி என்றும் என் முன்பு கையெழுத்து செய்தும் ஒப்புக் கொள்ளப்பட்டுள்ளது.

Sd/- T.Nithyakala B.Com.,B.L.,
நீதித்துறை நடுவர் எண்.1
உடுமலைப்பேட்டை.